செ.வெ.எண்: 819 நாள்: 29.11.2019

**பெண்களின் முன்னேற்றத்திற்காக அம்மாவின் அரசு தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.**

**அம்மா இருசக்கர வாகனத்திற்கு விண்ணப்பிக்க உள்ள மகளிர் அனைவருக்கும் அம்மா இருசக்கர வாகனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**புதுக்கோட்டையில் பயனாளிகளுக்கு ரூ.19 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதிவகளை வழங்கி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை நகராட்சி, தற்காலிக பேருந்து நிலைய மைதானத்தில், முதலமைச்சரின் சிறப்பு குறைதீர் திட்டத்தின் கீழ் இன்று (29.11.2019) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது.

தமிழகத்தில் ஒரே ஆண்டில் புதிதாக 9 அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க அனுமதி வழங்கிய மத்திய அரசிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்ததுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் கோரிக்கையான எய்ம்ஸ் மருத்துவமனை திட்டப் பணிகளை விரைவுபடுத்தவும் வழியுறுத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களும் இப்பணிகள் விரைவுபடுத்தப்படும் என உறுதியளித்துள்ளார்கள்.

புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளின் பல ஆண்டு கால கோரிக்கையான காவிரி-குண்டாறு

இணைப்புத் திட்டத்தை ரூ.7,673 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக தமிழக அரசின் திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் தனிகவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மகளிர் திட்டம், வருவாய்த்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, புதுக்கோட்டை நகராட்சி, வேளாண்மைத்துறை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேலைவாய்ப்புத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மாவட்ட நூலகம் உள்ளிட்ட துறைகளின் சார்பில் 6,500 பயனாளிகளுக்கு ரூ.19 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் உள்ள பெண்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம், உழைக்கும் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனங்கள் வழங்குதல், மகளிர் சுய உதவிக்குழு கடன் போன்ற திட்டங்களை செயல்படுத்தியதை போன்றே தற்போதைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் இத்திட்டங்களை தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உழைக்கும் மகளிருக்கான அம்மா இருசக்கர வாகனத்திற்கு விண்ணப்பிக்க உள்ள மகளிர் அனைவருக்கும் அம்மா இருசக்கர வாகனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பொது மக்கள் உரிய முறையில் பெற்று பயன் பெற வேண்டும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு.இரா.சின்னத்தம்பி, மாவட்ட வருவாய் அலுவலர் டி.சாந்தி, வேளாண் இணை இயக்குநர் சுப்பையா, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குநர் இளங்கோவன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் காளிதாசன், மகளிர் திட்ட இயக்குநர் லலிதா, மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் பழனியாண்டி, வருவாய் கோட்டாட்சியர் தண்டாயுதபாணி, நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மத்திய

தொலைதொடர்பு ஆலோசனை குழு உறுப்பினர் பாஸ்கர், மாவட்ட கூட்டுறவு அச்சக சங்கத் தலைவர் சேட் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**